**திரைப்படக் கலைஞர்களுக்கும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் கொடுக்கல் வாங்கல் அறிக்கை - 2019**

திரைப்படக் கலைஞர்களுக்கும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் 2019 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில்லாத காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்திற்கு தயாரித்தல் இடம்பெறுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம் நியதிச்சட்ட சபைகளில் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 1986 இன் 03 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில் நுட்பவியலாளர்களுக்குமான கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்புச் சட்டம். | | | | |
| (அ) | 11 ஆம் பிரிவு 3 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களுக்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழி வொன்றினூடாக | 2013 ஆம் ஆண்டிலிருந்து திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில் நுட்பவியலாளர்களுக்குமான | நிதிக்கூற்றுக்களுக்காக பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அதிகாரமளிக்கப்பட்ட சபையின் இரு அங்கத்தவர்கள் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு சபையொன்று நியமிக்கப்படாமை தொடர்பில் அச்சட்டத்திற்கு இணங்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்பின் தலைவராகவும் பொது முகாமையாளர் நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கத்தவராக குறிப்பிடப்பட்டுள்ளதால் நிதிக்கூற்றுக்களை அவர்களின் கையொப்பத்தின் மூலம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | இரண்டு உறுப்பினர்களினால் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | (i) | நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்காக நம்பிக்கைப் பொறுப்பு சபையொன்று நியமிக்கப்பட வேண்டிய போதும் 2013 ஆம் ஆண்டு முதல் நம்பிக்கைப் பொறுப்பு சபையொன்று நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | 1986 இன் 03 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில் நுட்பவியலாளர்களுக்குமான கூட்டுத்தாபன தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன பொறுப்புச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு போன்ற விடயங்களை கூட்டிணைப்பதற்காக நம்பிக்கை பொறுப்பு சபையை நியமிப்பதற்கு தொடர்ந்தும் வரிசை அமைச்சுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைத்துவும் மற்றம் நிர்வாகத்திற்காக நம்பிக்கை பொறுப்புச் சபையொன்று நியமிக்கப்பட வேண்டும். |
| | | (ii) | ஓய்வூதிய நலன்களை பெறுகின்ற கலைஞருக்கோ அல்லது தொழில்நுட்பவியலாளர் ஒருவர் மரணித்தால் அதில் ஏற்படும் வெற்றிடத்திற்கு காத்திருக்கும் பட்டியலின் பிரகாரம் தகைமை பெறும் ஓய்வூ பெற்ற ஒருவரை தெரிவு செய்தல் நாளதுவரையாக இடம் பெறவில்லை. | 2018 ஆம் ஆண்டில் புதிய ஓய்வூதிய நலன்களை பெற்றுக் கொள்வதற்கு முன்வராத மற்றும் அவ்வாண்டில் மரணித்த ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பில் கவனம் செலுத்தி போதியளவு நிதி ஏற்பாடு இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் 2019 சனவரி மாதம் முதல் காத்திருக்கும் பதிவேட்டில் உள்ள 34 கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர் களுக்கு ஓய்வூதியம் வழங்கல் இடம் பெற்றிருந்தது. | அங்கத்தவரொருவர் மரணித்தால் தகைமை பெறும் ஓய்வு பெறுவோர் ஒருவரை தெரிவு செய்வதற்கு குறித்த தகவல்கள் நாளது வரையாக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (iii) நம்பிக்கை பொறுப்பின் அங்கத்தவரொருவர் உயிர் வாழ்கின்றாறா என்பது தொடர்பாக நடைமுறையொன்று பின்பற்றப்படாமல் மாதாந்தம் ஓய்வூதிய படிகள் வங்கியிலிடப்பட்டிருந்தது. | தற்போது அவ்வாறான சிக்கலொன்று உருவாகாத வகையில் புதிய ஓய்வூதியம் பெறுவோரின் விபரங்கள் நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலப்பகுதிக்குள் ஒரு தடவையேனும் உயிருடன் இருக்கின்றார் என்ற சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். |
| | | (iv) நம்பிக்கை பொறுப்பின் மூலம் வழங்கப்படும் நலன்கள் தொடர்பாக கலைஞர் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் புதிய நலனாலிகளை நிதியத்திற்கு பங்களிப்புச் செய்ய முடியாத நிலைமையொன்று உருவாகியிருந்தது. | இவ்விடயம் தொடர்பாக அறிவூட்டுவதற்கு தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக புதிய ஓய்வூதிய வழங்கலுக்காக இலத்திரனியல் மற்றும் அச்சீட்டு ஊடகங்களிலிருந்து வழங்கப்படும் விளம்பரங்கள் மூலமும் இடம்பெறுகின்றது. | அங்கத்தவர்கள் நம்பிக்கை பொறுப்பின் மூலம் வழங்கும் நல்ன் தொடர்பாக தெரியப்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த வேண்டும். |
| (இ) | 6.2. ஆம் பிரிவு | நிதியத்தை பலப்படுத்திக் கொள்வதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது நடவடிக்கைகளை எடுப்பதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் அரச துறை அறவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு நிதியத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதியத்தை உருவாக்கிக் கொள்வதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்று செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 5(3)(அ) ஆம் பிரிவு | மரணித்த கலைஞரொருவரின் மரணச்சடங்கு செலவினமாக ஏதேனும் நிதி உதவி வழங்கப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இவ்விடயம் தொடர்பாக இறந்த ஓய்வூதியம் பெறுவோரின் சட்டரீதியான தரப்பினர் அறிவுறுத்தப்பட்ட போது அதற்குரிய வேண்டுகோள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை அடிப்படையில் உதவி வழங்கல் இடம் பெறவில்லை. | மரணித்த கலைஞரொருவரின் மரணச்சடங்குகளுக்காக நிதி உதவியொன்று வழங்கப்பட வேண்டும். |

## 2.2 செயற்பாடும் மீளாய்வும்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான பங்களிப்பு ஓய்வூதிய முறைமையை தயாரித்தல், நலன்புரி நிதியம், சேமிப்பிற்கான அல்லது சிக்கன சங்கம் மற்றும் ஏனைய சமனான முன்மொழிவு திட்டங்களை தாபித்தல், ஓய்வூதிய சமபளம், கடனொன்று, படியொன்று வீடமைப்பு வசதிகள் அல்லது ஏனைய சமனான | திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான கூட்டிணைக்கப்பட்ட சட்டத்தின் 05 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட பொறுப்பின் நோக்கங்களை | அங்கத்தவர்களின் வலுவூட்டுகைக்காக சேமிப்பிற்கான அல்லது சிக்கன சங்கங்களை தாபிப்பதற்காக நிதி வழங்கும் வழிகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | நலனொன்றை வழங்குதல் அல்லது மானசீக உபாதைகளுக்கு உள்ளாகி தனது தொழிலில் ஈடுபடுவதற்கு முடியாதிருந்தால் ஏதேனும் நன்கொடைகளை வழங்குதல், மரணச்சடங்கு செலவினத்திற்காக பணமோ அல்லது வேறேதேனும் உதவிகள் போன்ற கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் பிரதான நோக்கங்களுக்காக நிதியீட்டும் முறைகள் | செயற்படுத்துவது தொடர்பாக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் கவனத்தை செலுத்தி 2018 ஆம் ஆண்டில் ரூபா 10 மில்லியன் நிதி ஏற்பாட்டை பொது திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | மீளாய்வாண்டின் போது கலைஞர்களுக்கும் தொழில் நுட்பவியலாளர்களுக்குமான ஓய்வூதியமாக ரூபா 9,37,000 கூட்டுத்தொகை கையளிக்கப் பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திரைப்பட கலைஞர்களுக்கும் தொழில்நுட்ப வியலாளர்களுக்குமான நம்பிக்கைப் பொறுப்பின் பணிகளுக்காக நம்பிக்கைப் பொறுப்பு சபையொன்றினை நியமிக்கப்படா மையால் நலனாளிகளுக்காக சேமிப்பு நிதியமொன்றினை தாபித்தல், சிக்கன சங்கங்களை உருவாக்குதல், கடன் வழங்குதல், வீட்டு வசதிகளை வழங்குதல், ரண நன்கொடை உட்பட மருத்துவ உதவிகள் வழங்குதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | கருத்துரை வழங்கப்பட்டிருக்க வில்லை. | சிக்கன சங்கங்களை தாபிப்பதற்காக நம்பிக்கை பொறுப்பு சபை தாமதமின்றி நியமிக்கப்பட வேண்டும். |

## 2.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | திறைசேரி உண்டியல்கள், திறைசேரி மீள் கொள்வனவு பட்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைமுறிகளில் 2019 ஆம் ஆண்டினுள் நம்பிக்கைப் பொறுப்பினால் ரூபா 13,488,687 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மிகவும் இலாபமுடைய வட்டி / நலன்களை பெற்றுக் கொள்வதற்காக அரச வங்கியொன்றிடமிருந்து கூறுவிலைகள் பெறப்பட்டு கூடிய இலாபத்தை பெறும் வகையில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அரச வங்கிகளிடமிருந்து விசாரித்த பின்னர் மிகவும் சாதகமான மற்றும் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதி கருதி கவனம் செலுத்தி தேசிய சேமிப்பு வங்கியின் கூடிய நலன்களை பெற்றுக்கொள்வதற்காக பணம் முதலீடு செய்யப்பட்டது. | முதலீடு செய்யும் போது மிகவும் கூடிய நலன்களை பெற்றுக்கொள்வதற்காக அரச வங்கியொன்றிடமிருந்து கூறுவிலைகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நம்பிக்கைப் பொறுப்பின் விதிக் கோவை இலக்கம் 3.3.5 இன் பிரகாரம் மற்றுமொரு வகையில் ஓய்வூதிய நலனொற்றை, நலன்புரித் தொகையொன்றை அல்லது உதவு தொகையொன்று கிடைக்குமாயின் ஓய்வூதிய நலன்களை பெற்றுக்கொள்ள தகைமையற்ற போதிலும், நம்பிக்கைப் பொறுப்பினால் ஓய்வூதிய நலன்கள் செலுத்தப்படும் கலைஞர்கள் தொடர்பில் இதுவரை அந்த விதியின் பிரகாரம் பரிசோதனைக்கு உட்படுத்த அல்லது தகவல் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கை பொறுப்பு சபை நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறான நலனாலிகள் இருந்தால் அவர்களின் ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நம்பிக்கைப் பொறுப்பின் விதிக் கோவை இலக்கம் 3.3.5 இன் பிரகாரம் நலன்களை பெற்றுக்கொள்ள தகைமையில்லாத அங்கத்தவர்களை இனங்காண்பதற்கு தகவல் கோரப்பட வேண்டும் |

**2.4 நிதிய முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நம்பிக்கை பொறுப்பின் வசமுள்ள வங்கி நடைமுறைக் கணக்கில் 2019 இறுதிக் காலாண்டில் சராசரி மாதாந்த மீதி ரூபா 9.25 மில்லியனாக இருந்ததுடன் அப்பணத்தை செயற்திறனாக முதலீடு செய்து மேலதிக வருமானமொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அவதானிப்பு சரியானது. எதிர்காலத்தில் செயற்திறனான குறுங்கால முதலீடுகள் மூலம் மேலதிக வருமானமொன்று பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் | நடைமுறைக் கணக்கில் உள்ள ரூபா 9.25 மில்லியன் பணத்தை குறுங்காலத்தில் முதலீடு செய்து மேலதிக வருமானமொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |